தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 8-3-2017

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மனிதன் மனிதம் இரண்டையும் மாற்றுபவர்கள் மகளிர் -வேளாண் பல்கலை துணைவேந்தர் பேச்சு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் கோவை வேளாண்மைப் பல்கலைக்கழக அண்ணா அரங்கில் மகளிர் தின விழா இன்று (8-3-2017) நடைபெற்றது.

கோயமுத்தூர் மாவட்ட வருமான வரி உதவி ஆணையர் திருமதி. ஜெ. புவனேஸ்வரி இ.வா.ப., அவர்கள் தனது சிறப்புரையில் சமூக வடிவமைப்பில் மகளிரின் பங்கு மகத்தானது. ஆனால், இன்றளவும் மகளிர்க்கு எதிரான வன்கொடுமை நிகழந்து வருகிறது. இந்நிலை மாற வேண்டும். மாற்றம் மகளிரிடமிருந்து ஆரம்பிக்க வேண்டும். இளம் மாணவ, மாணவியர் தங்களுக்கானகுறிக்கோளை நிர்ணயித்து உழைக்கவேண்டும். இந்த ஆண்டு மகளிர் தின கொண்டாட்டம் ''மாற்றத்திற்கு தைரியமாக இரு'' என்ற தலைப்பில் கொண்டாடப்படுகிறது. அதற்கேற்றாற்போல், மகளிர் மாற்றத்திற்கும் சவால்களை ஏற்றுக்கொள்ளவும் தயாராக வேண்டும் என்றார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண்மை முதன்மையர் ச. மகிமைராஜா அவர்கள் பிரதமர் இந்திராகாந்தி அவர்களின் திறமை மற்றும் நிர்வாகம் ஆகியவற்றை சுட்டிக்காட்டி கல்லூரிப்பருவத்தில் மாணவியர் தலைமைப் பண்பை வளர்க்க வேண்டும் என்றார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. இராமசாமி அவர்கள் தனது தலைமையுரையில், வீரமங்கை வேலுநாச்சியார், பெண்பாற் புலவர் ஔவையார் ஆகியோரை நினைவுகூர்ந்தார். மனிதன் - மனிதம் இரண்டையும் மாற்ற வேண்டிய பொறுப்பு மகளிர்க்கு உள்ளது என்றார். வேளாண் பல்கலை பேராசிரியர்கள் 1,110 பேரில் 578 பேர் பெண்கள் என்றும் பல்கலைக்கழக அதிகாரிகளில் 57 பேரில் 27 பேர் பெண்கள் என்றும் குறிப்பிட்டார். முன்னதாக ராய்ச்சூர் வேளாண் அறிவியல் பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான கலை, இலக்கியப் போட்டிகளில் ராமாயணம் குறித்த வேளாண் பல்கலை மாணவிகளின் மௌன நாடகத்திற்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது குறித்து பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பேராசிரியை முனைவர் க. பூர்ணிமா அவர்கள் உப எழுத்தாளராக எழுதிய "பெண்ணாய் இருப்பதைக் கொண்டாடு" என்ற ஆங்கிலப் புத்தகத்தை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. இராமசாமி அவர்கள் வெளியிட்டார்.

விழாவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தொலைதூரக் கல்வி இயக்குநர் முனைவர். சாந்தி, பயிர் மேலாண்மைத் துறை இயக்குநர் முனைவர் சி. ஜெயந்தி, துணைப்பதிவாளர் முனைவர். ப. மலர்விழி, மாணவர் மன்ற ஆலோசகர் ஜி.ஜே. ஜானவி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட மாணவ மாணவியர் பங்கேற்றனர்.

சமூகத்தில் சிறந்து விளங்கிய பெண்மணிகள் குறித்த கருத்துக்காட்சி, மற்றும் நாடகங்கள் போன்ற கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

முன்னதாக செல்வி. கிருத்திகா வரவேற்புரையாற்றினார். இறுதியாக செல்வி. சிமி சம்யுக்தா நன்றியுரையாற்றினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்